வாரம் 26

# அட்டவணைகளும் வரைபுகளும்




1 ஒரு மணித்தியால நேரத்துள் பாதையில் சென்ற வாகனங்கள் தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

பிரதி செய்து அட்டவணையை நிரப்புங்கள்.

| வாகனங்கள் | அடையாளமிட்ட விதம் | தொகை |
|---|---|---|
| கார் | /////// | 7 |
| பேருந்து | ///// | 5 |
| வேன் | ///// | ........ |
| லொறி | // | ........ |
| சைக்கிள் | /////////// | ........ |



# அட்டவணைகளும் வரைபுகளும்

**வாரம் 26**

*தரப்பட்ட தகவல்களை நிரல் வரைபில் வகைக்குறித்தல்.*

**உதாரணம்:**

**ஒரு பாடசாலையில் 50 பிள்ளைகள் காலை உணவாக உண்டவை பற்றிய விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.**

| உணவு வகை | அடையாளமிட்ட விதம் | பிள்ளைகள் தொகை |
|---|---|---|
| பாண் | //////////// | 12 |
| தோசை | ////// | 6 |
| இடியப்பம் | ///////// | 9 |
| சோறு | /////////////// | 15 |
| அப்பம் | //////// | 8 |



இந்த தகவல்களை நிரல் வரைபு மூலம் காட்டுவோம்.






**வரைபிற்கேற்ப**

(1) மிகக் கூடுதலானோர் உண்ட உணவு சோறு ஆகும்.

(2) **6** பிள்ளைகள் தோசை உண்டுள்ளனர்.

(3) அப்பம் உண்டவர்களை விடக் கூடுதலாக நான்கு பேர் பாண் உண்டுள்ளனர்.

# வாரம் 26 அட்டவணைகளும் வரைபுகளும்

**2** இது ஊர்வலமொன்றில் கொண்டு செல்லப்பட்ட நிறக் கொடிகளின் எண்ணிக்கைகளைக் காட்டும் அட்டவணை ஆகும்.

| நிறம் | எண்ணிய விதம் | கொடிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| வெள்ளை | /////////////// | 15 |
| நீலம் | ////////// | |
| சிவப்பு | ///// | |
| பச்சை | ///////// | |
| மஞ்சள் | //////////// | |



மேலே தரப்பட்ட அட்டவணையைப் பயிற்சிப் புத்தகத்தில் பூர்த்தி செய்து அதன் மூலம் நிரல் வரைபொன்று வரையுங்கள்.

**3** ஒரு தோட்டத்தில் உள்ள மரங்களின் எண்ணிக்கைகள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| மர வகை | எண்ணிய விதம் | மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மா | /////// | |
| தென்னை | ////////// | |
| பலா | ///// | |
| ஈரப்பலா | /////// | |
| பாக்கு | ////////// // | |



இந்த அட்டவணையைப் பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்து பூர்த்தி செய்து, அதன் மூலம் நிரல் வரைபு வரையுங்கள்.

**அந்த வரைபைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.**

(1) தோட்டத்தில் எந்த வகை மரங்கள் மிகக் கூடுதலாக உள்ளன?

(2) தோட்டத்தில் எந்த வகை மரங்கள் மிகக் குறைவாக உள்ளன?

(3) பலா மரங்களின் எண்ணிக்கைக்கும் தென்னை மரங்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

(4) ஈரப்பலா மரங்களை விட எத்தனை மாமரங்கள் கூடுதலாக உள்ளன?

(5) தோட்டத்தில் மிகக் கூடுதலாக உள்ள மர வகைக்கும் மிகக் குறைவாக உள்ள மர வகைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

# அட்டவணைகளும் வரைபுகளும்

**வாரம் 26**

**4** கட்டத்துள் தரப்பட்டுள்ள A, B, C, D, E எனும் எழுத்துக்கள் இடம்பெற்ற தடவைகளுக்கு ஏற்ப அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள். அத்தகவல்களை. வரைபொன்றில் காட்டுங்கள்.

B C D
A B C D
D B A C A
B A A D A

| எழுத்து | எண்ணிய விதம் | எண்ணிக்கை |
|---|---|---|
| A | | |
| B | | |
| C | | |
| D | | |
| E | | |



இவ் வரைபிலிருந்து பெறக்கூடிய தகவல்களை உள்ளடக்கிய இரண்டு வாக்கியங்கள் எழுதுங்கள்.

**5** இக் கணித பாடநூலின் 16ம் பக்கத்தைப் புரட்டிக் கொள்ளுங்கள். அதில் 0, 3, 5, 9 ஆகிய இலக்கங்கள் இடம் பெற்றுள்ள தடவைகளுக்கு ஏற்ப அட்டவணையைப் பூரணப்படுத்துங்கள்.

| இலக்கம் | எண்ணிய விதம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 0 | | |
| 3 | | |
| 5 | | |
| 9 | | |

இத்தகவல்களை நிரல் வரைபில் காட்டுங்கள்.

இவ் வரைபின் துணையுடன் பின்வரும் வினாக்களுக்கு பயிற்சிப் புத்தகத்தில் விடை எழுதுங்கள்.



(1) அதிக தடவைகள் இடம் பெற்றுள்ள இலக்கம் எது?
(2) மிகக் குறைவான தடவைகள் இடம் பெற்றுள்ள இலக்கம் எது?
(3) நான்கு தடவைகள் இடம் பெற்றுள்ள இலக்கங்கள் எவை?
(4) மூன்று தடவைகள் இடம் பெற்றுள்ள இலக்கங்கள் எவை?